1982 பிப்ரவரி 19]

கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டம்.

* வினா எண் 271— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடல்நீரை சுத்தம் செய்து உப்பினை நீக்கி குடிநீராக மாற்றி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

(இ) எப்பொழுது இத்திட்டம் அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ. 60,000 ஆகும்.

(இ) இதற்கான முன்னோடித் திட்டம் செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் என்ற சிற்றூரில் அமுலாக்கப்பட்டுள்ளது. அதன் வெற்றியைப் பொறுத்து, இத்திட்டம் விரிவாக்கப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாடு உலகிலேயே நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள நாடாக இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை வெற்றி கரமாகச் செயல்படுத்தும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, எவ்வளவு பணம் செலவாகும் என்பதைக் கருத்திலே கொள்ளாமல், வெளிநாடுகளிலேயிருந்து இத்துறையிலே சிறந்த நிபுணர்களைக் கொண்டு வந்து செயல்படுத்த அரசு முன்வருமா ? அரபு நாடுகளிலே கூட இந்த முறையிலே குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருவதாக அறிகிறோம். அதே முறையில் செயல்படுத்தி சென்னை நகர மக்களுக்குக் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவளத்தில் பரிசீலனை செய்வதைப் போல, தமிழ்நாட்டில் சில பகுதிகளிலுள்ள கிணறுகளில் கிடைக்கும் உவர் நீரை நுண்கலை வடிப்பு 'ஹைப்பர் ஃபில்ட்டரேஷன்' என்னும் முறையில் மாற்றியமைக்க முன்னோடியாக சில சிற்றூர்களில் மேற்சொல்லப்பட்ட அமைப்பு கொண்ட கருவிகளை ரூ. 4.36 இலட்சம் செலவில் அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தவிர, இது சம்பந்தமாக தமிழக அரசு தொழில் துறை அரசுச் செயலர், மற்றும் மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தைப் பற்றி, குறிப்பாக சுதர்சன் அனைத்துலக முன்னற்ற ஆலோசகர்கள் கொடுத்த ஒருங்கிணைந்த மின்சக்தி நிலயம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையம், இரண்டும்— டபுள் பர்ப்பஸ் அதிலே, ஒருங்கிணைந்த மின் க்தி நிலையமும், மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையமும் சென்னையில் அமைத்தல்

பற்றி விவாதிப்பதற்காகப் பல கூட்டங்களை நடத்தினர். ஆனால், எந்த முடிவும் இந்த இரட்டைத் திட்டம் சம்பந்தமாக இதுவரை எடுக்கவில்லை. ஆனால், அரசைப் பொறுத்த வரைக்கும் எவ்வளவு 'ஆப்ஸ்டக்கில்ஸ்' இருந்தாலும்கூட, இந்த முயற்சிகளை தொடர்ந்து ,எடுக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலமாவது இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறதா ? இத்திட்டத்திற்கு மத்திய அரசிடம் நிதி உதவியும் ஒத்துழைப்பும் கேட்கப்பட்டுள்ளதா ? கேட்கப்பட்டிருந்தால் மத்திய அரசு எந்த வகையிலே உதவ முன் வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரமான பதில் தருகிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, கடல் நீரை குடிநீராக்குவோம்; கடல் பாசியில் அல்வா செய்வோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் வாக்குறுதியாகக் கொடுத்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணா வழியில் நடக்கும் இந்த அரசு கடல் பாசியிலிருந்து அல்வா செய்யும் திட்டத்தைப் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் 31-12-1981-க்குள் கடல் பாசியிலிருந்து அல்வா செய்வோம் என்று சொல்லவில்லை. அது ஒரு 'ஆம்பிஷன்'. அது ஒரு ஆசையால், அவரால், சொல்லப் பட்டது. அதை ஒரு கொள்கையாக வைத்து........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடல் பாசியில் அல்வா தயாரிக்கும்போது பார்க்கலாம். இது மூலக்கேள்விக்கு சம்பந்தப் பட்டது அல்ல.

கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* வினா எண் 272—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராம குடிநீர் சப்ளை விரைவுத் திட்டங்களுக்காக 1981–1982 ஆம் ஆண்டில் தமிழக அரசு எவ்வளவு செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) மத்திய அரசின் உதவி இதற்கு கிடைக்குமா? எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூபாய் 30 கோடி.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS